<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செய்தி வெளியீடு</u>

<u>தொகுதி-4 தேர்வு முடிவுகள்</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தொகுதி – 4 ல் அடங்கிய இளநிலை உதவியாளர், தட்டச்சர், பில் கலெக்டர் உள்ளிட்ட 10,718. காலிப்பணியிடங்களை நிரப்பிட 07.07.2012 அன்று நடத்தியது. இத்தேர்வை 10,34,421 விண்ணப்பதாரர்கள் எழுதினர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தேர்வுக்கான முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது. அறிவிக்கை செய்யப்பட்ட 10,718 காலிப்பணியிடங்களில் தமிழக அரசின் அனுமதி கிடைக்கப்பெற்ற 10,216 பணியிடங்களுக்கு மதிப்பெண் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோரின் பதிவெண் பட்டியல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணைய தளங்களான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.net ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய பணியிடங்களுக்கான முடிவுகள் அரசின் பணியாளர் குழுமத்தின் (Staff Committee) ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் வெளியிடப்படும்.

தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவரும் தங்களது ஸ்கேன் செய்யப்பட்ட கல்வித்தகுதி / சாதிச்சான்றிதழ் உள்ளிட்ட இதர சான்றிதழ்களின் நகல்களை ( Images) தேர்வாணைய இணையதளமான **www.tnpscexams.net** வாயிலாக, வரும் 15.10.2012ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான துறை ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு இம்மாதம் மூன்றாம் வாரத்தில் தொடங்கும். கலந்தாய்வு வெளிப்படையாகவும் தரவரிசையின் (Rank) படியும் நடத்தப்படும்.

எழுத்துத் தேர்வு மட்டும் உள்ள தேர்வுகளுக்கான தேர்வு முடிவுகள் தேர்வு முடிந்த மூன்று மாதங்களுக்குள் அறிவிக்கப்படும் என்ற தேர்வாணையத்தின் தேர்வுத்திட்டத்தின்படி இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இன்று, 2009 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளிலடங்கிய பதவிகளுக்கு காத்திருப்போர் பட்டியலில் உள்ள 148 விண்ணப்பதாரர்கள் மற்றும் 2009-2010 ஆண்டிற்கான கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ள 331 விண்ணப்பதாரர்களுக்கும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செயலாளர்